## திருநின்றவூர்

# ஜெயா கல்வி குழுமத்தில் உயர்கல்வி பயிலரங்கம்

திருவள்ளூர், நவ.29: திருநின்றவூர் ஜெயா கல்விக் குழுமம் சார்பில், பள்ளி மாணவர்களுக்கான திறனை ஊக்குவிக்கவும், உயர்கல்வி வாய்ப்புகளை அறிந்துகொள்ள வசதியாகவும், 'ஊக்குவித்தல் மற்றும் உயர்கல்விக்கான மூன்று நாள் பயிலரங்கு' நேற்று முன்தினம் துவங்கியது.

கல்லூரி தலைவர் பேராசிரியர் அ.கனகராஜ் தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் எம்.எஸ். தனராஜ் வரவேற்றார். இதில் சிறப்பு விருந்தினராக சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி டி.என்.வள்ளிநாயகம் கலந்துகொண்டு குத்துவிளக்கேற்றி விழாவை துவங்கி வைத்தார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், மாணவர்களாகிய நீங்கள், தெளிவாக பேச வேண்டும், தெரிந்ததை பேச வேண்டும், தங்களது உடல்நலத்தை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்' என்றார்.

முன்னாள் மாநில தேர்தல் ஆணையர் டி.சந்திரசேகரன் பேசுகையில், தன்னம்பிக்கையோடு வாழ்ந்தால் சாதனைகளை செய்யலாம்' என்றார்.

தொடர்ந்து பயிலரங்க பயிற்றுவித்தல் உரையினை டாக்டர்.மோகன் பாலகிருஷ்ணன், சோலை தமிழினியன், பேராசிரியர் சுந்தரராமன் ஆகியோர் ஆற்றினர். இதில், 24 பள்ளிகளில் இருந்து 1500க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டனர்.




திருநின்றவூர் ஜெயா கல்வி குழுமம் சார்பில் நடந்த ஊக்குவித்தல் மற்றும் உயர் கல்விக்கான பயிலரங்கில் சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி வள்ளி நாயகம் பேசுகிறார்.